பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 198

வெள்ளிக்கிழமை
13 ஜூன் 2025

வைகாசி 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## கொரோனா தொற்றால் இருவர் உயிரிழப்பு!

விரிவு பக்கம்:- 05

# யாழ். மாநகரசபையில் ஆட்சியமைப்பது யார்?

## மும்முனைப் போட்டிக்குள் இன்று கூடுகின்றது சபை!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் மாநகரசபையில் ஆட்சியமைப்பது யார்? என்ற பரபரப்புக்கு மத்தியில், இன்று வெள்ளிக் கிழமை காலை 8.30 மணிக்கு உள்ளூராட்சி ஆணை யாளரின் தலைமையில் சபை கூடவுள்ளது.

11

சாவகச்சேரி நகரசபை

## வீடா? சைக்கிளா? இன்று கடும்போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி நகரசபையில் ஆட்சியைக் கைப்பற்றப் போவது யார்? என்பது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவைக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு உள்ளூராட்சி ஆணையாளரின் தலைமை

11

சாவகச்சேரியில்

## பேரவையின் சார்பில் தெரிவான இருவருக்கு எதிராக வழக்குகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேசசபைக்கு தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் தெரிவுசெய் யப்பட்ட இருவருக்கு எதிராகத் தடைவிதிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் வழக் குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி நகரசபையில் ஆட்சியமைப் பது தொடர்பான அமர்வு இன்று மாலை

11

## இராணுவமுகாமுக்கு அருகில் மனித என்புச் சிதிலங்கள் மீட்பு

### கற்கோவளத்தில் பரபரப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 13

பருத்தித்துறை கற்கோவ ளம் பகுதியில் நீண்டகால மாக இராணுவத்தின் கட்டுப் பாட்டில் இருந்து அண்மையில்

11

## நல்லூர் சபையில் மானின் ஆட்சி!

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாணம் நல்லூர் பிர தேசசபையில் இன்று தமிழ் மக்கள் கூட்டணி (மான்) ஆட்சியமைக்கும் என்று நம்பகரமாகத் தெரியவரு கின்றது.

நல்லூர் பிரதேசசபையின் அமர்வு உள்ளூராட்சி ஆணையாளர் தேவநந் தினி பாபுவின் தலைமை யில் நல்லூர் பிரதேசசபை யின் சபா மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

11

## திஸ்ஸ விகாரை விடுவிக்கப்படாது

### மாற்றுக் காணி, இழப்பீடுதான் தீர்வு
### அமைச்சர் சந்திரசேகர் திட்டவட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

தையிட்டி திஸ்ஸ விகா ரைக் காணி விடுவிக்கப் ப டாது. விகாரை அமைந் துள்ள காணிகளின் உரி மையாளர்களுக்கு இழப் பீடு அல்லது மாற்றுக் காணி வழங்குவதே தீர் வாக அமையும் என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித் துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது.

11

## வவுனியா சிறைச்சாலைக்குள் அதிரடியாக நுழைந்தது சி.ஐ.டி.

### அதிகாரிகளிடம் பல மணிநேரம் விசாரணை



வவுனியா, ஜூன் 13

வவுனியா சிறைச்சாலைக்குள் நேற்றுத் திடீரென நுழைந்த குற்றப்புலனாய்வுப் பிரி வினர், அங்கு பல்வேறு விசாரணை

11

## மாணவர்களுக்கு போதைப்பொருள்; சாவகச்சேரியில் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 13

பாடசாலை மாணவர்க ளுக்குப் போதைப்

11

போர்க்குற்றங்கள் தொடர்பான

## பொறுப்புக்கூறலை நிறைவேற்ற இலங்கையை வலியுறுத்துங்கள்

### ஜேர்மனியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 13

போர்க்குற்றங்கள் தொடர்பான பொறுப்புக்கூற லுக்கு இலங்கையை ஜேர்மனி வலியு றுத்தவேண்டும் என்று சர்வதேச

11

'உள்ளடி வேலையள் பார்த்துத்தான் உள்ளூராட்சிசபையளையே பிடிக்கவேண்டியிருக்காம் கண்டியளோ'

யாழ். கடற்பரப்பில் கரையொதுங்கும்

## பிளாஸ்ரிக் துகள்கள்; விசாரணைக்கு உத்தரவு

விரிவு பக்கம் :- 11



## இந்தியாவில் விமான விபத்து; 250க்கும் மேற்பட்டோர் சாவு!

புதுடில்லி, ஜூன் 13

இந்தியாவின் அஹமதாபாத் நகரிலி ருந்து, பிரிட்டனின் தலைநகர் லண்ட னுக்குச் சென்ற 'ஏர் இந்தியா' விமானம், குடியிருப்புத் தொகுதியொன்றில் வீழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் 250க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் துள்ளனர்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



| கொவிசெத | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4100 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 17 24 31 69 |
| விசேட எழுத்து | Q |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1167 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 17 29 54 62 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0126 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 9 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2206 |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 17 42 63 64 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5858 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 8 5 7 2 7 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1888 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 02 14 25 68 |
| விசேட எழுத்து | N |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 12.06.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0433 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கங்கள் | 7 2 7 6 |

## 18 லட்சம் ரூபா பெறுமதியான

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு முதற்கட்ட நிதி கையளிப்பு

**யாழ்ப்பாணம், ஜூன் 13**

**18 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுத்திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.**

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின்மூலம் இந்த வீட்டுத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. வடக்கு மாகாண ஆளுநரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சுக்குப் பாரப்படுத்தப்பட்டு பிரதேச செயலர்களின் ஒத்துழைப்புடன் பயனாளிகள் இந்தத் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 பயனாளிகளும், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தலா 2 பயனாளிகளும், மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தலா 3 பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலா 18 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த வீட்டுத் திட்டத்தில், முதற்கட்டக் கொடுப்பனவான 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக் கான காசோலை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய வடக்கு ஆளுநர், "நாம் சிறிய வீடு அமைக்க உங்களுக்கு உதவுகின்றோம். மழைகாலத்துக்கு முன்னர் வீடுகளின் கட்டுமானத்தை நீங்கள் முடிக்கவேண்டும். கட்டுமானத்தை விரைவாக முடித்து அடுத்த கட்டக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். (எ-26)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 12.06.2025 | வியாழக்கிழமை | 0566 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| Z | 7 6 2 5 8 8 | |

| Super Ball DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.06.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2832 | F | 15 59 62 76 |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.06.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Z | 37 39 47 60 | 4993 |

| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 12.06.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0702 | 09 16 50 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.06.2025 | வியாழக்கிழமை | |
| மிதுனம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♊ | 06 07 30 38 | 4544 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 12.06.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| D | 16 | 02 18 43 63 | 2008 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 12.06.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| E | 04 05 12 75 | 2658 |

## வீட்டுத் திருத்தத்துக்காக 238 பயனாளிகள் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 13



தற்போது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி அதிகமாக வழங்கப்பட்டுள்ளமையால் வீட்டுத் திருத்தத்துக்காக அதிக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வீட்டுத் திருத்தத்துக்காக 238 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றது.

வீட்டுத்திட்டத்துக்காக 18 இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட எந்தவொரு வீட்டுத் திட்டத்திலும் இந்தளவு நிதி வழங்கப்படவில்லை. நாம் முதன்முறையாக அதிகளவு நிதியை வழங்குகின்றோம். அதைச் சரியான முறையில் பயன்படுத்தவேண்டும் - என்றார். (எ-26)

## தீப்பரவலால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

காரைக்கால் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தில் நான்கு நாள்களுக்கு மேலாக தீப்பரவல் காணப்பட்டதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது என்று கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தக் திண்மக்கழிவு நிலையம் ஆரம்பத்தில் சேதனப் பசளை உற்பத்திக்காக உருவாக்கப்பட்டது. எனினும் பின்னர் திண்மக்கழிவு தரம்பிரித்தல் நிலையமாக மாற்றப்பட்டு, தற்போது கழிவுசேகரிக்கும் நிலையமாக உள்ளது. பிரதேசசபையின் பொறுப்பற்ற செயலால் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று பிரதேச மக்கள் சுட்டிக்காட்டிக்காட்டியுள்ளனர். (எ-125)



## காங்கேசன்துறை - கீரிமலை வீதி விரைவில் விடுவிக்க நடவடிக்கை

### பவானந்தராஜா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

காங்கேசன்துறை கீரிமலை வீதி விரைவில் விடுவிக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் பவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த பொதுமக்கள், காங்கேசன்துறை கீரிமலை வீதியை பாவனைக்கு விடவேண்டும் என்றும், தற்போது இந்த வீதியில் கிருஷ்ணன் கோயில்வரை குறிப்பிட்ட சிலநாள்கள் மட்டுமே பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் பவானந்தராஜா, கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இந்தப் பிரதேசம் காணப்படுகின்றது. கடற்படையுடன் கலந்துரையாடி விரைவில் வீதியை விடுவிப்போம் - என்றார். (எ-125)

## செம்மணி வீதிக்கு ஒளியூட்டுங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

செம்மணி வீதியிலுள்ள மின்குமிழ்களை ஒளிரச்செய்து போக்குவரத்தை இலகுபடுத்துமாறு பொதுமக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

செம்மணி வீதியிலிருந்து செம்மணி மயானம் வரை மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் குறித்த வீதியின் மிகுதிப் பகுதி இரவு நேரங்களில் ஒளியின்றிக் காணப்படுகின்றது.

இதனால் பொதுப்போக்குவரத்தில் ஈடுபடுவோர் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் பயணிக்கவேண்டியுள்ளது.

எனவே குறித்த பகுதிக்கு மின்னிணைப்பை ஏற்படுத்தி மின்குமிழ்களை பொருத்துவதற்குரிய நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரச்சினைகளைக் களைய ஆர்வமற்ற மக்கள் பிரதிநிதிகள்!

பொதுமக்கள் அதிருப்தி

**யாழ்ப்பாணம், ஜூன் 13**

**சங்கானை மற்றும் தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் நேற்று ஆளுங்கட்சி உறுப்பினர்களுடன் மாத்திரமே நடைபெற்றது.**

அதில் ஏனைய யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் பங்கேற்கவில்லை.

நேற்று காலை முதல் மதியம் வரை சங்கானை மற்றும் தெல்லிப்பழைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் நடைபெற்றன.

தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் குழுத்தலைவர் பவானந்தராஜா தலைமையில் நடைபெற்றபோது அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் வருகைதந்திருந்தார். எனினும் ஏனையவர்கள் எவரும் பங்கேற்கவில்லை.

அத்துடன் சங்கானைப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி கலந்துகொண்டார். பொதுமக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகள் குறித்து கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட நிலையில் ஆளுங்கட்சிசார் உறுப்பினர்கள் மாத்திரமே பங்கேற்று அரசாங்கத்தின் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

மக்கள்சார் பிரச்சினைகளை எடுத்துரைக்கும் மக்கள் பிரதிநிதிகள் கூட்டங்களில் ஏனைய மக்கள் பிரதிநிதிகள் பங்குபற்றாத இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதேவேளை கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரு எம்.பி.களுடன் மாத்திரமே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

## முத்துமாரி அம்மனை மீட்டுத்தர கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 13

கட்டுவன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தை அதன் கும்பாபிஷேக தினமான ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் இராணுவத்திடம் இருந்து மீட்டுத்தரவேண்டும் என்று ஆலயத்தின் குருக்கள் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை முன்வைத்துள்ளார். கட்டுவன் சந்தி வசாவிளான் சந்தி வரையான வீதியைத் திறக்கவேண்டும். ஆலய கும்பாபிஷேகத்தை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி நடத்த நாள் குறித்துள்ளோம். அதை நடத்துவதற்கு முன்நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். ஆலயத்தைச் சூழக் கடந்தகாலங்களில் வாழ்ந்த 50 குடும்பங்கள் மீளக் குடியமரத் தயாராக உள்ளன என்று ஆலயக் குருக்கள் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், இது தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-125)

## பாடசாலை மாணவர் வரவு இருபாலையில் மந்தம்!

சமூகமட்ட அமைப்புகள் தகவல்

யாழ்ப்பாணம், ஜீன் 13

இருபாலையில் பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்லும் எண்ணிக்கை குறைவடைந்துவருகின்றது என்றும் இதுகுறித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூகமட்ட அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. இருபாலை தெற்குப் பகுதியில் அநேகமான பாடசாலை மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்வதைத் தவிர்க்கின்றனர்.

எனவே பாடசாலை மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்கான காரணங்களை கண்டறிந்து ஊக்குவிப்புகளை பிரதேச செயலகம் முன்னெடுப்பதுடன் பெற்றோருக்கும் விழிப்புணர்வை வழங்கவேண்டும். எதிர்கால சந்ததிக்கு கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வுகளை ஊட்ட வேண்டும் என்றும் அவர்கள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-41-125)



## நாட்டில் குரங்குகள் 5.17 மில்லியன்!

கொழும்பு, ஜூன் 13

இலங்கை முழுவதும் நடத்தப்பட்ட விலங்கு கணக்கெடுப்பில் 5.17 மில்லியன் குரங்குகள் பதிவாகியுள்ளன.

மார்ச் 15 அன்று நடத்தப்பட்ட தேசிய விலங்குக் கணக்கெடுப்பு அறிக்கையை விவசாய அமைச்சு நேற்று வெளியிட்டது. அதன்படி 5.17 மில்லியன் குரங்குகளும், 1.74 மில்லியன் மந்திகளும், 2.66 மில்லியன் ராட்சத அணில்களும், 4.24 மில்லியன் மயில்களும் பதிவு. செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சிறைத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளராக ஜகத்!

கொழும்பு, ஜூன் 13

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் புதிய ஊடகப் பேச்சாளராக சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் வீரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் அநுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து ஒரு கைதி விடுவிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய சம்பவத்தைத் தொடர்ந்து, சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திசாநாயக்க சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ச-இ)

## மின்சாரசபை சட்டத்துக்கெதிராக 7 வழக்குகள்

கொழும்பு, ஜீன் 13

கடந்த மாதம்16ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மின்சாரசபைச் சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் ஏழு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்த மனுக்கள் 3 நாள்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (ச-41-6)




## 'நேசமில்லாட்டிக்கும் நாசமறுக்காதையுங்கோ'

காய்ச்சமரம் கல்லடிபடத்தான் செய்யும். ஆனால் அந்த மரத்துக்கு காவல் இருக்கவேண்டியவையே கல்லால எறிஞ்சு அதைக் காயப்படுத்திற வேலையும் சில இடங்களில நடக்குது. அதுவும் மற்றவையின்ர காயங்களையும், கான்சரையும் மாத்திற டாக்குத்தர்மாருக்கும் இப்பிடி உள்வீட்டில இருந்தே சிலர் கல்லெறியினம்.

யாழ்ப்பாணத்தில ஒரேயொரு கான்சர் ஆஸ்பத்திரிதான் இருக்குது. ஒருகாலத்தில மூளைப்பிசகெண்டால் அந்த ஆஸ்பத்திரிக்குத்தான் ஆக்களை அனுப்பிறவை. ஆரும் அந்த ஊரின்ர பேரைச்சொன்னாலே அவருக்கும் மூளைப்பிசகெண்டு நக்கலடிச்ச காலமெல்லாம் இருந்தது. ஆனால் பிறகு அந்த ஆஸ்பத்திரியில கான்சர் யுனிட் வந்தபிறகு, அதின்ர பேரின்ர அர்த்தமே மாறிப்போட்டுது. வெளிமாவட்டங்களில இருந்தெல்லாம், இஞ்சவாற அளவுக்கு கான்சர்காரருக்கு நல்ல மருத்துவம் செய்யத் தொடங்கிட்டினம். அதால விசர் ஆஸ்பத்திரி எண்ட பேர் மறைஞ்சு, இப்ப அதைக் கான்சர் ஆஸ்பத்திரி எண்டால் தான் எல்லாருக்கும் தெரியிற அளவுக்கு நிலைமை மாறிட்டுது. அப்பிடி அந்தக் கான்சர் யுனிட்டுக்கு நல்லபேர் வாறதுக்குக் காரணம், அங்க பொறுப்பா இருக்கிற பொம்பிளை டொக்டர்தான். அவாவை தங்கட நாட்டில வந்து வேலைசெய்யச் சொல்லி, சிலநாட்டு எம்பஸியல் ஆசை காட்டினவை. ஆனாலும், 'எங்கட சனத்துக்குத்தான் என்ர சேவை இப்ப தேவை' எண்டு வந்த வாய்ப்பையெல்லாம் உதறிப்போட்டு, இஞ்ச நிண்டு சேவை செய்யிறா அந்த டொக்டர். அதோட தனிய கான்சர் ட்ரீட்மெண்டோட நிக்காமல், அவைக்கு சத்தான பால்மா, சாப்பாடு எண்டதுகளையும் கொடையாளிகளிட்ட இருந்து வாங்கிக் குடுக்கிறா. இதால அங்க கான்சரோட வாறவையெல்லாம் அந்த டொக்டரை கடவுள்மாதிரித்தான் பாக்கினம்.

ஆனால் இப்பிடி ஒரு டொக்டரை எல்லாரும் தூக்கி வைச்சுக் கொண்டாடினால், சிலருக்குப் பொறுக்காதெல்லோ. அப்பிடிப் பொறுக்காத சிலர் அவாக்கு எதிரா வாய்க்குவந்தபடி எல்லாம் கதைகட்டத் தொடங்கிட்டினம். நரம்பில்லாத நாக்கால என்னவும் சொல்லலாம்தானே. அதால எந்த ஆதாரமுமில்லாமல் அவா காசடிக்கிறா, வருத்தக்காரரைக் கவனிக்கிறேலை எண்டு இல்லாததும் பொல்லாததுமா யூரியூப்புகளிலையும், பேஸ்புக்கிலையும் காசைக்குடுத்து கதைகட்டி அவாவை அவமானப்படுத்த வெளிக்கிட்டிருக்கினம். அதைவிட அந்தக் கான்சர் யுனிட்டுக்கெண்டு புதிசா ஒரு ஆய்வுகூடத்தையும் திறக்கவிடாமல் குறுக்க நிக்கினமாம். அந்த ஆய்வுகூடத்தை திறந்தால் மஹரகமவுக்கு போகாமல் இஞ்சையே எல்லா ரெஸ்ட்டும் செய்யலாம். கான்சரையும் கெதியா மாத்தலாம். ஆனால் அப்பிடி நல்லது நடக்கவே கூடாது எண்டு, ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பா இருக்கிறவரே கொஞ்சம்கூட சனத்தில 'நேசமில்லாமல்' நடக்கிறாராம். அவர்தான் இப்பிடி அந்த டொக்டருக்கு எதிரா தன்ர அல்லக்கைகளைவைச்சு புரளியளையும் கிளப்புறார் எண்டு ஆஸ்பத்திரி முழுக்க ஒரே கதை. ஆனாலும் செய்த புண்ணியம் கவசமா இருக்கேக்க, உந்தப் பொய்புரட்டெல்லாம் எந்த மூலைக்கு? இப்ப அவாவுக்கு எதிரா பொய்புரட்டுச் சொல்லுறதை நிப்பாட்டச் சொல்லி, அரச மருத்துவ அதிகாரியள் சங்கமும் களத்தில இறங்கியிருக்கு. நல்லது செய்யத்தான் மனமில்லாத ஆஸ்பத்திரிக்குப் பொறுப்பா இருக்கிற 'நேசமானவர்' நல்லது செய்யாட்டியும் நாசமறுக்கிற வேலையளையாவது செய்யாமல் இருக்கலாமெல்லோ.

padsi@uthayan.com -பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதருவதாக இருக்கும். புதிய முயற்சிகளில் சிறுசிறு தடைகள் ஏற்படக்கூடும். அலுவலகப் பணியின் காரணமாக பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**இடபம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. கடன்கள் விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**மிதுனம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**கன்னி:** பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். மாலையில் நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும்.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சிதருவதாக இருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** தாய்வழி உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**தனுசு:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வாழ்க்கைத்துணையுடன் உறவினர் வீடுகளுக்குச் சென்றுவருவீர்கள்.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன்வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை இன்று கிடைக்கும்.

### கோப்பாய் பிரதேசத்தில்

# பாடசாலை மாணவர்களிடையே சிறுநீரக நோய்த்தாக்கங்கள்!

**யாழ்ப்பாணம் , ஜூன் 13**

**கோப்பாய் பிரதேசத்தில் பாடாசாலை மாணவர்களுக்கு சிறுநீரக பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக மருத்துவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான பவானந்தராஜா சுட்டிக்காட்டியுள்ளார்.**

கோப்பாய் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கோப்பாய் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளின் மலசலகூடங்கள் சுத்தமின்றிக் காணப்படுகின்றன. இதனால் மாணவர்கள் சிறுநீரக பாதிப்புப் தொற்றுக்கு ஆளாகின்றனர். இதுதொடர்பில் கல்வி திணைக்களம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கல்வித் திணைக்களப் பொறுப்பு வாய்ந்த அதிகாரி, மாணவர்களே அரச பாடசாலைகளில் மலசல கூடங்களைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபடுகின்றனர். இதேவேளை பாடசாலைகளில் 50 வீதமான ஊழியர்களுக்கான வெற்றிடம்கூட நிரப்பப்படவில்லை - என்றார்.

இதுகுறித்து ஒருங்கிணைப்புக்குழு தலைவர் இதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்தார். (ச-125)

## அறிமுகவிழா

தாய்நிலம் கல்விக்கூடம் இலவச விசேட வகுப்புகளின் அறிமுகவிழா கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு இடம்பெறவுள்ளது. மார்க்கண்டு குமாரசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலி.கிழக்குப் பிரதேசசபைச் செயலாளர் இராமலிங்கம் பகீரதன், நல்லூர்ப் பிரதேசசபைச் செயலாளர் யுகராஜா ஜெலீபன், சிறப்பு விருந்தினர்களாக உரும்பிராய் மேற்கு ஜே/263 கிராம சேவையாளர் திருமதி தர்சிகா ஜெனீஸ், கோண்டாவில் வடக்கு ஜே/119 கிராம சேவையாளர் மகேஸ்வரன் தனுசன், கோண்டாவில் வடக்கு ஜே/118 கிராம சேவையாளர் ச. றதீபன், யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அதிபர் க. தவசீலன் யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை அதிபர் க. நித்தியானந்தன்இ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அன்றையதினம் தரம் 5 புலைமைப்பரிசில் வகுப்பு மற்றும் தரம் 6-11 வரையான மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. வகுப்புகள் வார இறுதி நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும். அனுமதிகளைப் பதிவுசெய்யும் மாணவர்களுக்கு அறிமுகவிழாவில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படும். அனுமதிகளை 077621 5328 அல்லது 0771 017966 என்ற தொலைபேசி இலக்கங்களினூடாகத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (ச-33)

## கால்நடைத் திருட்டுகளை கட்டுப்படுத்தக் கோரிக்கை

வவுனியா, ஜூன் 13

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் அதிகரித்துள்ள கால்நடைத் திருட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தியுள்ளார். வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

வவுனியா வடக்கு பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளிலும் கால்நடைத் திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் எம்மிடம் முறையிடுகின்றனர். கால்நடைத் திருட்டுக்களால், பல கால்நடை வளர்ப்பாளர்கள் தமது அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கின்றனர். கடந்த சில நாள்களுக்கு முன்னர் குளவி சுட்டான் பகுதியில் ஒரு கால்நடை வளர்ப்பாளரின் இருபதுக்கும் மேற்பட்ட கால்நடைகள் ஒரே இரவில் திருடப்பட்டுள்ளன என்று எம்மிடம் தெரிவிக்கப்பட்டது. கால்நடைத் திருட்டுகளைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (எ-26)

## முழுநிலா அரங்கு

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியின் முழுநிலா அரங்கம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ஸ்ரீரதி முருகசோதி தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் யாழ். வலயக் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-41-17)

## பரிசளிப்பு விழாவும் நூல் வெளியீடும்

யாழ்.புத்தூர் ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் "மகாஜனம்" நூல் வெளியீடும் எதிர்வரும்16ஆம்திகதிதிங்கட்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை முத்துலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளன. பாடசாலை முதல்வர் பரமநாதன் கமலதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில் கல்விசார் ஆலோசனைக்குழு உறுப்பினருமான ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சிறப்பு விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன், கௌரவ விருந்தினர்களாக பழைய மாணவர் சங்க உபதலைவர் திருமதி கீர்த்தனா ராகுலன், வலிகிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் துரைசிங்கம் சுரேஸ்குமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)

## சுற்றுச்சூழல் விழிப்புணர்வு; பருத்தித்துறையில் நடைபவனி!

யாழ்ப்பாணம், ஜூன் 13

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, சுற்றாடல் முன்னோடிக் கழகத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள விழிப்புணர்வு நடைபவனியும் வீதி நாடகமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

"பிளாஸ்ரிக் மாசுபாட்டை முடிவுறுத்துவோம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள நடைபவனி யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி 1 ஆம் கட்டைச் சந்தியில் இருந்து இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி பருத்தித்துறை பிரதான வீதியூடாகப் பயணித்து பருத்தித்துறை பேருந்துநிலையம் சென்று அங்கிருந்து விநாயக முதலியார் வீதியூடாக கல்லூரியைச் சென்றடையவுள்ளது. இதன்போது பிளாஸ்ரிக் ஒழிப்புத் தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் வீதி நாடகம் இடம்பெறவுள்ளது. (ச-33-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

தொலைவில் தெரிவதைப் பற்றி சிந்திக்காதவனுக்கு துன்பம் அருகில் காத்திருக்கிறது என்பது தெரியாமலே போகிறது.


– கன்பூசியஸ் –

## கொரோனாவில் இருந்து விடுபட ..!


இலங்கையில் கொரோனா வைரஸின் புதிய திரிபால் இரு மரணங்கள் பதிவாகியுள்ளன என்று மருத்துவப் பேராசிரியர் துஷாந்த மெகெதர கூறியிருக்கின்றார். தற்போதைய திரிபு கடுமையான அபாயத்தை ஏற்படுத்தாது என்றாலும், வயதானோர் மற்றும் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு இது ஆபத்தாகமுடியும் என்பதை சுகாதார நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர். எனவே, இந்நிலையில் கவனமாகவும், பொறுப்புடனும் நடவடிக்கை எடுப்பது அவசியம்.

அண்மைய ஆய்வுகளின்படி, சுவாச நோயாளிகளில் 9 முதல் 13 வீதத்தினர் புதிய கொரோனாத் திரிபால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் இந்தத்திரிபு சமூகத்தில் எந்தளவு ஆழமாக வேரூன்றியுள்ளது என்பதை அறியமுடியும். தற்போது கொரோனாத் தொற்றைக் கண்டறியும் சோதனைகள் குறைவாகவே நடைபெறுவதால், உண்மையான பாதிப்பின் அளவைத் தெளிவாக அறியமுடியாது. அதனால் பொதுமக்கள் எச்சரிக்கையாக இருப்பது மட்டுமே இத்தொற்றின் விளைவுகளைக் குறைக்கும். கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்னரைப் போன்று செயற்படும் நிலைமை நாட்டில் இல்லை. தற்போதைய பொருளாதார நெருக்கடி அதற்கொரு பிரதான காரணமாகும். எனவே, இந்தச் சூழ்நிலையில் தனிப்பட்ட பொறுப்பு மிக முக்கியமானது. கடந்தகாலங்களில் நாம் கற்றுக்கொண்ட சுகாதார முறைகளை தொடர்ச்சியாகப் பின்பற்றுவது ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பானதாக இருக்கும்.

தற்போது பரவும் கொரோனா வைரஸின் புதிய திரிபு ஆபத்தானது அல்ல என்று சுகாதாரத் தரப்பினர் தெரிவித்திருக்கின்றனர். வீணாக அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் அவர்கள் நம்பிக்கையளித்துள்ளனர். ஆயினும் சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுவது புத்திசாலித்தனமானது என்று எச்சரிக்கை செய்யவும் அவர்கள் தவறவில்லை. வயதானவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி கொண்டவர்கள் அந்த எச்சரிக்கையைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். கொரோனாத் தொற்றால் அண்மைய நாள்களில் மரணமடைந்த இருவரும் வேறு நோய்நிலைமைக்கு உள்ளாகியிருந்தவர்கள் என்பதையும் கருத்திற்கொள்ள வேண்டும். கொரோனா போன்ற தொற்று நோய்கள் தனிநபர்களின் எச்சரிக்கையால் மட்டுமே தடுக்கப்படுகின்றன. ஒவ்வொருவரின் அலட்சியப்போக்கும் மற்றவர்களுக்கு ஆபத்தை விளைவிக்கும். தற்போதைய புதிய திரிபு குறித்து விழிப்புடன் இருப்பதோடு, அடிப்படைத் தடுப்புமுறைகளை ஒவ்வொருவரும் பின்பற்றுவது அவசியம். அதை உணர்ந்து செயற்படுவது நமக்கும், மற்றவர்களுக்கும் நன்மையை ஏற்படுத்தும். சமூகப் பொறுப்பே சுகாதாரப் பாதுகாப்பின் முதற்படி என்பதை அனைவரும் மனதில் இருத்த வேண்டும்.




## கொரோனாத் தொற்றால் நாட்டில் இருவர் மரணம்



எனினும் அபாய நிலைமை இல்லை

**கொழும்பு, ஜூன் 13**

**கொரோனாத் தொற்றால் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று வயம்ப மருத்துவபீடத்தின் முதன்மை மருத்துவப் பேராசிரியர் துஷாந்த மெதகெதர தெரிவித்துள்ளார்.**


சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
இலங்கை தொற்று நோயியல் பிரிவுத் தகவலின்படி, சுவாசநோயாளிகளில் 9 முதல் 13 வீதமானவர்கள் தற்போது புதிய கொவிட் திரிபினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்தக் கொரோனாத் தொற்று மிகக் குறைந்த தீவிரத்தன்மை கொண்டது. அதனால் ஏற்படும் தாக்கம் மிகக் குறைவு. ஆனால் 65 வயதுக்கு மேற்பட்ட நோயாளர்களுக்கும், பலவீனமான நோயெதிர்ப்பு சக்தி கொண்டவர்களுக்கும் இது தீவிரமானதாக இருக்கலாம். அவ்வாறானவர்கள் அவதானமாக இருக்கவேண்டும்.
நாட்டில் இதுவரை இரு மரணங்கள் பதிவாகியுள்ளன. இருவருக்கும் நோய்கள் இருந்தன. தற்போது எங்களுக்கு எந்த ஆபத்தான நிலைமைகளும் இல்லை. அதனால் தேவையற்ற அச்சம் தேவையில்லை. ஆனால் குறிப்பிட்ட தரப்பினர் இது தொடர்பாக விழிப்புடன் இருக்கவேண்டியது அவசியம்-என்றார். (எ-இ)

## தலைதூக்குகிறது எலிக்காய்ச்சல்

கொழும்பு, ஜூன் 13
நாட்டில் எலிக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது.
நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளது. இரத்தினபுரி, குருணாகல், கேகாலை, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவான எலிக்காய்ச்சல் நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்றும் சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 13
காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையில் சுன்னாகம் பகுதியில் வைத்து கசிப்புடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 40 லீற்றர் கோடா, ஒன்றரை லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.
சந்தேகநபருக்கெதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-41-23)



## உப்புக்குத் தட்டுப்பாடு மீண்டும் இறக்குமதி

கொழும்பு, ஜூன் 13
நாட்டில் நிலவும் உப்புத் தட்டுப்பாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு 30,000 மெற்றிக் தொன் உப்பினை இறக்குமதி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.
கடந்த மே மாதம் 22ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 7ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 18,163 மெற்றிக் தொன் உப்பு நாட்டுக்கு இறக்குமதிசெய்யப்பட்டுள்ளது.
நாட்டுக்கு இறக்குமதிசெய்யப்பட்ட உப்பின் மொத்த மதிப்பு 1,291 மில்லியன் ரூபாவாகும்.
உப்பு இறக்குமதிக்காக 571 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வனவளத்திணைக்களம் அபகரித்துள்ள

# கல்மடுக்குளத்தின் கீழான வயல்களை விடுவியுங்கள்

### ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**வவுனியா, ஜூன் 13**

**வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தமிழர்களின் பூர்வீக இடமான கல்மடுக் குளத்தையும், அதன்கீழான வயல் நிலங்களையும் விடுவிக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.**

வவுனியா வடக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கல்மடுக்குளம் என்றொரு குளம் இருப்பின், அந்தக் குளத்தின்கீழ் மக்களுக்கு வயற்காணிகள் கட்டாயம் இருந்திருக்கும். அந்தக் குளத்தின் கீழ் மக்களுக்கு வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டும். வனவளத் திணைக்களம் மக்களுக்குரிய வயற் காணிகளைப் பகிர்ந்தளிக்கமுடியாது எனக் கூறுவதை ஏற்கமுடியாது.

கடந்தகால அசாதாரண சூழ்நிலை காரணமாக அந்தப் பகுதியில் குடியிருந்த, விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்ட தமிழ் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அந்த மக்கள் இன்னமும் மீள்குடியமர்த்தப்படவில்லை. மக்கள் குடியிருந்த மற்றும், விவசாய நடவடிக்கைக்குப் பயன்படுத்திய நிலங்கள் பற்றைக்காடுகளாகக் காணப்படுகின்றன. அவற்றை வனப்பகுதி என்று கூறி விடுவிக்காது வனவளத்திணைக்களம் ஆக்கிரமித்து வைத்திருப்பது நியாயமற்றது. கல்மடுக்குளம் என்ற பகுதியில் மக்களால் முன்பு விவசாயம் செய்யப்பட்டமையாலேயே, தற்போதும் கமநல அபிவிருத்தித்திணைக்களத்தில் அந்தக் குளம் தொடர்பான பதிவுகள் உள்ளன. அரச திணைக்களங்களால் அபகரிக்கப்பட்டுள்ள மக்களின்குடியிருப்புமற்றும், விவசாயக்காணிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். கல்மடுக்குளத்தின்கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களின் தரவுகளையும், அங்கு ஏற்கனவே மக்கள் பயிர்ச்செய்கை மேற்கொண்டமைக்கான ஆதாரங்களையும் வவுனியா வடக்கு பிரதேச செயலரிடம் சமர்ப்பிக்கவேண்டும்என்றுகமநல அபிவிருத்தித்திணைக்கள உத்தியோகத்தரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் அந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்தினார். (எ-26)

## குளோபல் சௌத் மாநாட்டில் பிரதமர் பங்கேற்பு

கொழும்பு, ஜூன் 13

தற்போதைய டிஜிற்றல் யுகத்தில் ஜனநாயகச் செயன்முறைகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு முகங்கொடுக்க, உலகளாவியரீதியில் தெற்கு வலயத்திலிருந்து கிடைக்கும் தலைமைத்துவத்தை ஊக்குவிப்பதற்கு Factum நிறுவனத்தின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

'EPIGS'25 குளோபல் சௌத் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொழும்பில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் நடைபெற்றது. 'EPIGS'25 என்பது, கொழும்பை மையமாகக்கொண்ட ஆசிய -பசுபிக் பிராந்தியம் குறித்துக் கவனம் செலுத்தும் Factum ஆராய்ச்சிநிறுவனம், டொக்ரசிபோர்ட்டிங் இன்டர்நேஷனலுடன் இணைந்து, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவுடன் ஏற்பாடு செய்த தேர்தல் நேர்மை குறித்த சர்வதேச மாநாடாகும்.

இந்த ஆண்டு மாநாட்டின் பிரதான கருப்பொருள்களான தேர்தல் நேர்மை, தகவல் ஒருமைப்பாடு மற்றும் டிஜிற்றல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கும் தொழில்நுட்பம், ஜனநாயகம் மற்றும் ஆளுகை ஆகியவற்றுக்கும் இடையேயான தொடர்பை அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தை மாநாட்டில் பிரதான உரையை ஆற்றிய பிரதமர் எடுத்துரைத்தார். (ச-26)

## கடற்றொழில் அமைச்சரைச் சந்தித்த மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள்!

கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகருடன் நேற்றுமுன்தினம் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணம் (காரைநகர், வேலணை), கிளிநொச்சி, மன்னார் முல்லைத்தீவு, புத்தளம் ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றுள்ளனர்.

தமிழக மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது என்று சுட்டிக்காட்டிய மீனவர் சங்கப் பிரதிநிதிகள், அவர்களால் கடல் வளங்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்றங்களால் பறிமுதல் செய்யப்பட்டு மயிலிட்டி மீனவத் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளால் கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்ட மீனவ சங்கப் பிரதிநிதிகள் அவற்றைப் பொருத்தமான முறையில் அகற்றித்தரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

தமிழக மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஏற்கனவே கடற்படையுடன் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கடற்றொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்த விடயம் தொடர்பாக இந்தியத் தூதரகத்திடம் வலியுறுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீனவ சமூகத்தினர் எதிர்கொள்ளும் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் துரிதமாகவும், உரியமுறையிலும் தீர்வுகாணப்படும் என்று உறுதியளித்த கடற்றொழில் அமைச்சர், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கும் என்று குறிப்பிட்டார். (எ.125.26.213)

### மன்னார் கடற்பரப்புகளிலும்

## கரையொதுங்கும் பதார்த்தங்கள்

மன்னார், ஜூன் 13

மன்னார் தென் கடற்பிராந்தியப் பகுதியிலுள்ள இறங்கு துறைகளில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை தொடக்கம் இரசாயனப் பதார்த்தங்களுடனான கப்பல் கழிவுகள் கரையொதுங்கி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அவை பொலித்தீன் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலக்கூறுகள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதைத் தவிர ஏனைய இரசாயன பதார்த்தங்கள், கொள்கலன்கள் போன்றவைகளும் கரையில் ஒதுங்கி வருகின்றன இந்நிலையில் கரையோரங்களில் வாழும் மக்கள் மற்றும் மன்னார் தென்கடல் கடற்கரைக்குச் செல்வோர் விழிப்புணர்வுடன் செயற்படுமாறும் அவற்றைச் சேகரிக்கவோ அல்லது தங்கள் வீடுகளுக்கு எடுத்துச்செல்வதையோ தவிர்த்துக்கொள்ளுமாறும் மன்னார் கடற்றொழில் நீரியல் வள உதவிப் பணிப்பாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-60)



கிளை இடமாற்ற அறிவிப்பு
கிளிநொச்சி

JANASHAKTHI FINANCE

முன்னர் ஓரியண்ட் / பைனான்ஸ் பிஎல்சி
ஆக அறியப்பட்ட
எமது கிளை தற்போது
ஜனசக்தி /பைனான்ஸ் பிஎல்சி
ஆக பெயர் மாற்றமடைந்து
கீழ்க்காணும் புதிய முகவரிக்கு
13/06/2025 இடம்பெயர்கிறது:

புதிய முகவரி:
இல 158, யாழ்ப்பாணம் வீதி,
கிளிநொச்சி

பழைய முகவரி:
கரடிபோக்கு சந்தி , A9 வீதி,
கிளிநொச்சி.


12/06/2025 முதல் பழைய முகவரியில்
சேவைகள் நிறைவடையும்.

தொடர்பு இல:
Natgunaseelan Sivaskar
076 660 9236

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
19 . 10 . 1941



மறைவு
15 . 05 . 2025

**கடந்த 15.05.2025 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த**
**எமது குடும்பத் தலைவர்**

## அமரர் ஆறுமுகம் செல்லக்கண்டு (ராசநாயகம்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் எதிர்வரும் (14.06.2025) சனிக்கிழமை காலை 05.00 மணியளவில் ஊறனி தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


**தகவல்**
**குடும்பத்தினர்.**
**077 815 7250**

**உதயசூரியன் கடற்கரை வீதி மதவடி,**
**வல்வெட்டித்துறை**

(CS 58484) E-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 03 . 1952



மறைவு
12 . 06 . 2025

## சிவஸ்ரீ பரமேஸ்வர குருக்கள் மனோகரகுருக்கள்

கோப்பாயை பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறை, கல்வியங்காடு ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட வல்வை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ. பரமேஸ்வர குருக்கள் மனோகரக்குருக்கள் அவர்கள் (12.06.2025) நேற்று சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வல்வெட்டித்துறை பரமேஸ்வரக்குருக்கள் - தாட்ஷாயணி அம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், சித்தங்கேணி சோமசுந்தர ஐயர் - சரஸ்வதி அம்மா தம்பதிகளின் மருமகனும், ஸ்ரீமதி. கௌரிபாலா அவர்களின் அன்புக் கணவரும் மலரகித சர்மா, மற்றும் காலஞ்சென்றவர்களான மலர்மங்கை, மங்கையற்கரசி ஆகியோரின் அன்பு சகோதரரும் பிரதாபக்குருக்கள், பராபரக்குருக்கள், பிரசன்னரூபக்குருக்கள், பத்மரூபி, ஷர்மினி, நிரூபக்குருக்கள், நிரோஜனா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரியங்கா, காயத்ரி, பிரியதர்ஷினி, கௌரிசங்கர சர்மா, ஜெஹானு, பிரசாந்தக்குருக்கள் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சாக்ஷினி, பிரித்வீன் சர்மா, நாதரூபிணி, ப்ரணீஷா, பிரஜீத் சர்மா, ஹரித்ரன் சர்மா, மனோராஜ் சர்மா, சந்தோஸ் சர்மா, சந்தீப் சர்மா, மானஷன்.சர்மா, மாதுஷன் ஷர்மா, ப்ரத்யக்ஷன் சர்மா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் G.P.S விளையாட்டரங்க வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் (13.06.2025) அன்று காலை 11.00 மணியளவில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் பிற்பகல் 02.00 மணியாவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

G.P.S **விளையாட்டரங்க வீதி,**
**கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்.**

**இங்ஙனம் - குடும்பத்தினர்**
**077 401 0264**

# வேலை வாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் மற்றும்
சமுத்திரா ரேடர்ஸ் (Hardware)
நிறுவனங்களிற்கான வேலை வாய்ப்பு
ஆண், பெண் இருபாலரும்
விண்ணப்பிக்கலாம்.
**தொடர்புகளுக்கு:**
**076 151 7481, 077 494 9683**

# தடைசெய்யப்பட்ட மீன்பிடி
# இலங்கை மீனவர்கள் 76 பேர் கைதாகினர்!

இலங்கை கடற்படை, கடந்த இருவாரங்களில் நாடளாவிய ரீதியில் நடத்திய சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல்களின் போது தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 76 மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அனேகமான அத்துமீறிய மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. இதன்படி, கட்டைக்காடு, புதுமாத்தளன், கல்லடிச்சேனை, அடுக்குப்பாடு, பொடுவகட்டு, குச்சவெளி, சல்பே ஆறு மற்றும் பாலமின்மடு ஆகிய பகுதிகளிலேயே அனேகமான மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-125)

# வேலையாள் தேவை

சாவகச்சேரி நகரில் உள்ள பாதணிகள் விற்பனை நிலையத்திற்கு தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் 17 - 25 வயதுக்கு உட்பட்ட ஆண் விற்பனையாளர் தேவை. ஆர்வமுள்ள உள்ளவர்கள் தமது பெற்றோருடன் வருகை தரவும்.

**077 795 3175**


# பெயர் மாற்றம்

ஏழாலை தெற்கு மயிலங்காடு என்ற முகவரியை வதிவிடமாக கொண்ட சசிகுமார் இயஞ்சிகா (NIC - 996680720v) என்ற பெயருடைய நான் இன்று முதல் சசிகுமார் ஜென்சிகா என பெயர் மாற்றம் செய்கின்றேன்.

சசிகுமார் ஜென்சிகா

# கண்ணீர் அஞ்சலி

**திரு. இராசநாயகம் செல்வராசா**



யாழ் நல்லூர் தெற்கு ஸ்ரீ பத்தினாச்சி அம்மன் கோயில் உரிமையாளர்.

திரு. இராசநாயகம் செல்வராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லம் வல்ல ஸ்ரீ பத்தினாச்சி அம்மனை பிரார்த்திக்கின்றேன்.

**சிவஸ்ரீ. சோம கேதீஸ்வரக் குருக்கள்**
**( ஆலய குருவும், ஆலயப் பொறுப்பாளரும் )**

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 6, ஆள்காட்டி வளவு ஒழுங்கை, 33/1 pt ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வைத்திலிங்கம் அரியரட்ணம் என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.
மேற்குறித்த ஆதனத்தினை வைத்திலிங்கம் கைம்பெண் தங்கம்மா 2001.12.27 ஆம் திகதியிட்டு 4400 ஆம் இலக்க அறுதியுறுதி மூலம் வைத்திலிங்கம் அரியரத்தினத்திற்கு அறுதியாக விற்றுள்ளார். பின்னர் குறித்த ஆதனத்தினை அரியரட்ணம் யாழினி, அரியரட்ணம் லக்சினி ஆகியோர் 18797 ஆம் இலக்க 2022.03.19 ஆம் திகதிய பிரிவிடல் உறுதி மூலம் தமக்குள் பிரிவிட்டுக் கொண்டுள்ளனர். குறித்த உறுதியில் தமது தந்தையாரின் கொள்வனவும் ஆட்சியும் எனவும், தமது தாயார் ரஜனி என்பவர் 92 ஆம் ஆண்டிலிருந்து தமது தந்தையாரை நிரந்தரமாகவே பிரிந்து வாழ்ந்து வரும்போது தமது தந்தையாரால் அவரது பணத்தில் இவ்வாதனம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும், தமது தாயாருக்கு குறித்த ஆதனத்தில் தேடிய தேட்டப்பாகமோ கொள்வனவுப்பாகமோ சென்றடையமாட்டாது எனவும், இதன் காரணமாக தமது இருவரதும் பிதாவழி முதுசமும் ஆட்சியுமாகும் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த உறுதியில் ஆதன அட்டவணை இ அரியரட்ணம் லக்சினிக்கு நிந்தமாக பிரித்துவிடப்படும் ஆதனம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று நல்லூர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் மாநகரசபை கிராம அலுவலர் பிரிவு அரியாலை மத்தி தெற்கு J/96 சிவியாதெரு இறை "ஆத்திக்காட்டுவளவு" நிலப்பரப்பு 1 குளி 6.75 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P.தனராஜா அவர்களால் 28.02.2022ந் திகதி 1896A இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் 1ம் 2ம் துண்டுகளாகச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குளி 5.92 இதில் கிழக்குப்பக்கமாக குறித்த படத்தில் 2ம் துண்டாகச் சுட்டப்பட்ட குளி 10.52 பத்து தசம் ஐந்து இரண்டு இதற்கு எல்லை
கிழக்கு : பஞ்சரட்ணம் பெண் நாகேஸ்வரியின் ஆதனம்
வடக்கு : பத்தடி அகலப்பாதை
மேற்கு : 1896A இலக்கப்படத்தில் 1ம் துண்டு அரியரட்ணம் யாழினியின் ஆதனம்
தெற்கு : அருமைரட்ணம் பெண் மகாலட்சுமியின் ஆதனம்
இதடங்கலும் இன்னும் இதன் வடக்கெல்லையில் உள்ள 10 அடி ஒழுங்கையால் அதன் கிழக்கு எல்லையில் இருக்கும் ஆட்காட்டி ஒழுங்கைக்கு போக்குவரத்துச் செய்யும் உரித்தும்
தற்போது அரியரட்ணம் லக்சினி மேற்குறித்த ஆதன அட்டவணையில் குறிப்பிட்ட ஆதனத்தின் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அரியரட்ணம் லக்சினி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆதன பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 4. சங்கிலியன் வீதி. 44/25 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியம் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது. குறித்த ஆதனம் கனகேஸ் சதீஸ் அவர்கள் 11.05.1983ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு இராஜேஸ்வரன் தங்கராஜா முகதாவில் 107ம் இலக்க அறுதி உறுதி மூலம் மனோரஞ்சிதமலர் பாலசுப்பிரமணியமிற்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் வைரமுத்து சக்திவேலும் பெண் மனோரஞ்சிதமலர் மூலம் 08.01.2024ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சுகனியா கணேசலிங்கம் முகதாவில் 1178ம் இலக்க அறுதி உறுதி மூலம் பாலசுப்பிரமணியம் இரத்தினசேகரும் ரதிதேவிக்கும் வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, நல்லூர் பிரிவு, நல்லூர்க்கோவிற்பற்று, நல்லூர் இறை, "கொண்டவாலி வளவும் பொட்டன் வளவும்" நிலப்பரப்பு 1 ஒன்றும் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும். இது 1982.07.01ந் திகதி உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ்.இராமநாதனால் அளந்து வரையப்பட்ட 22ம் இலக்க நிலஅளவைப்படத்தில் 1ம் துண்டாக சுட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை

கிழக்கு :- ஒழுங்கை

வடக்கு :- தருமலிங்கம் பரமராஜாவும் பெண் இராகுபதிதேவியும், அமரசிங்கம் கைம்பெண் மகேஸ்வரிக்கும் சொந்தமான மிகுதி ஆதனம்

மேற்கு :- சின்னத்துரை பெண் தவமணியினாதனம்

தெற்கு :- சுப்பிரமணியம் மகேந்திரராஜாவின் ஆதனம். இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை பாலசுப்பிரமணியம் இரத்தினசேகரும் ரதிதேவிக்கும் என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பாலசுப்பிரமணியம் இரத்தினசேகரும் ரதிதேவிக்கும் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**யாழ் மாநகரசபை**

(CR/45152) J-1

## ஆதன பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 13 கலீமா வீதி. ஆதன இல (28Pt) 26/7 லொட் 04. என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் நைனா மொகமட் அயூப் பெண் சலீமாவும் பிள்ளைகளும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை நைனா மொகமட் அயூப் பெண் சலீமா. நைனா மொகமட் அயூப் மகள் றயீசா. நைனா மொகமட் அயூப் மகள் அமீனா. மொகமட் அப்துல்லா மொகமட் மஹறூம் பெண் சனூமா 07.01.1982 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் மொகைதீன் மன்சூர் முகதாவில் 1651ம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் நைனா மொகமட் அயூப் மகள் அமீனா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை நைனா மொகமட் அயூப் மகள் அமீனா 25.10.2010 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் சுல்தான் பஸீல் முகதாவில் 54ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை பெமினா பெனாசிர் பஸீல் தஸ்னீம் 30.05.2018 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜரட்ணம் ரகுராஜா முகதாவில் 9660ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா 17.11.2018ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு இராஜரட்ணம் ரகுராஜா முகதாவில் 9940 இலக்க வெளிப்படுத்தல் உறுதியில். உறுதியில் சொல்லப்பட்ட விபரங்களுக்கமைய இவ்வாதனமானது தனக்கே உரித்தானது என வெளிப்படுத்துபவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹசான் பெண் ஜனூஸ் ஜமாலியா 11.03.2019 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு மொகமட் அலியாஸ் மொகமட் அர்சிக முகதாவில் 09ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் ஜஹான் ஹஸன் மகள் ஹஸீனா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/87ம் இலக்க கிராமஅலுவலர் பிரிவில் "பரந்தன் புளியடி" நிலப்பரப்பு குளி 12.10 (குளி பன்னிரண்டு தசம் பத்து) உத்தரவு பெற்ற நில அளவையாளர் மைவின் ஞானப்பிரகாசம் அவர்களால் 19.12.2018ம் திகதி அளந்து விபரித்த 3366ம் இலக்க படத்தின்படி துண்டு-4. இதற்கு எல்லைகள்:-

கிழக்கு: துண்டு - 5.

வடக்கு: தனிப்பட்ட பாதையும். ரி.மயில்வாகனம். மறுபேரின் ஆதனமும். துண்டு - 2.

மேற்கு: துண்டு-3

தெற்கு: அப்துல் மயீட் கைம்பெண் ஜமீலாவினதும் மளுபேரினதும் ஆதனம்.

இதடங்கலும்:


தற்போது இவ்வாதனத்தைத் ஜஹான் ஹஸன் மகள் ஹஸீனா தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும். உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானதுஜஹான் ஹஸன் மகள் ஹஸீனா என்பவர் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்.**
**மாநகர சபை.**
**யாழ்ப்பாணம்.**

(CR/45153) J-1

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 1ம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை



அன்னை மடியில் : 31.10.1969 ஆண்டவன் அடியில் : 25.05.2024


### அமரர். சுப்பிரமணியம் கருணாகரன் (சிற்பாச்சாரியர்)

**நீ பேசும் பேச்செல்லாம் நான் தினமும் கேட்கும் சங்கீதமே**
**விழியால் உனை ஒரு தரம் பார்த்தால்-எந்தன்**
**வேதனை அகன்றிடுமே**
**நீ இல்லாததால் நானும் இங்கே ஏழையானேனே**
**நீதானே என் உலகமென்றிருந்தேன்**
**ஏன் இப்படிச் சென்றீர்!**
**நேற்றுப் போல இருக்கிறது-உன்**
**நெஞ்சகலா அந் நினைவு!**
**நெஞ்சம் பதைக்கிறது அதனை நினைக்கையிலே**
**எங்கள் ஆருயிர் கரனே! மீண்டும்**
**என்னிடம் நீர் வந்திடு!**

*இல. 91/1, ஆடியபாதம் வீதி,*
*திருநெல்வேலி,*
*யாழ்ப்பாணம்.*

*மீளாத் துயரோடு*
*உன் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்*
*பாசமிகு மனைவி*

## 31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம் : 14.10.1944 மறைவு : 14.05.2025

### அமரர்.அப்பாப்பிள்ளை நடராசா

(ஓய்வு நிலை அதிபர், மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயம்)

**வையகத்தே வாழ்வாங்கு வாழ வைத்தீர்**
**வானுறையும் தெய்வமாய் உயர்ந்துவிட்டீர்**
**பொய்யுடலம் போனாலும் போகாது உம்நினைவு**
**வையகத்தே உங்கள் வதனமினிக் காண்போமா.**

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவிபுரிந்த நெஞ்சங்களுக்கும் நேரில், தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையம், பனர் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

*[illegible] வீதி,*
*சங்கானை.*

*குடும்பத்தினர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட்டக்குளத்தை தூர்வாருங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள வட்டக்குளத்தைத் தூர்வாரி புனரமைப்புச் செய்யுமாறு பொது மக்கள்கோரிக்கைவிடுத்துள்ளனர். கோப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் அவர்கள் இவ்வாறு சுட்டிக்காட்டினர்.

பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கல்வியங்காடு மற்றும் கோப்பாய்ச் சந்திக்கு இடையே காணப்படும் கோப்பாய் கமநல சேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான குறித்த குளம் பாதுகாப்பு அணைகளின்றிப் பயணிகளுக்கு அச்சமூட்டும் வகையில் காணப்படுகின்றது. இது தொடர்பில் விரைந்து நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (ச-33-125)

## ரஷ்யாவுக்கு ரணில்

கொழும்பு, ஜூன் 13

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் காலை ரஷ்யாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டார்.

இந்த விஜயத்தின்போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்யவுள்ளார் என்றும் எதிர்வரும் 22 ஆம் திகதி நாடு திரும்புவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## சர்வதேசதரத்தில் மைதானம்; வவுனியாவில் திறந்துவைப்பு

வவுனியா, ஜூன் 12

வவுனியா ஓமந்தை சர்வதேச தரத்திலான விளையாட்டுக் கட்டடத் தகுதியுடன் கூடிய தடகள விளையாட்டு மைதானம் நேற்று திறந்துவைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறைப் பிரதி அமைச்சர் சுதத் திலகரத்ண வால் திறந்துவைக்கப்பட்ட இந்த மைதானம் நீண்டகாலமாகப் பயன்பாடு இன்றிக் காணப்பட்டது. அண்மையில் விளையாட்டுத் துறை அமைச்சர் குறித்த பகுதிக்கு விஜயம்செய்து அதுதொடர்பில் ஆராய்ந்த நிலையில் மைதானம் தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ச-110)






## நிலாவரைப் பகுதியில் பாரம்பரிய உணவகம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நிலாவரைப் பகுதிக்கு வருகைதரும் சுற்றுலாப்பயணிகளை ஈர்க்கும் முகமாக பாரம்பரிய உணவகம் ஒன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் முகமாக குறித்த பகுதியில் உள்நாட்டு பொருள்களை சந்தைப்படுத்து மென்மையான வர்த்தக வலையம் மற்றும் பாரம்பரிய உணவு நிலையம் ஒன்றை நிறுவுதல் குறித்து ஆராயப்பட்டதுடன் இந்தத் திட்டத்துக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை 50 மில்லியன் ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின்கீழ் 3 மில்லியன் ரூபா செலவில் அதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பிரதேச செயலகத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார். (ச-33-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனை சட்டக்கோவையில் திருத்தங்கள் செய்ய அனுமதி

கொழும்பு, ஜூன் 13

தண்டனைச் சட்டக்கோவையில் (உடலியல் தண்டனை) திருத்தம் செய்வதற்கான சட்டவரைவொன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளதாவது:-

உடலியல் தண்டனை மூலம் பிள்ளைகளுக்கு ஏற்படும் உடல் மற்றும் உளதுன்புறுத்தல் அதிகரித்திருப்பது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு துறையிலும் உடல் தண்டனை மூலம் துன்புறுத்தலுக்கு உள்ளாவதனை தடை செய்தல் மற்றும் உடல் துன்புறுத்தலுக்காக தண்டனை விதிப்பதற்கான ஏற்பாடுகளை விதிப்பதற்காக (19 ஆவது அதிகாரம்) தண்டனைச் சட்ட கோவையை திருத்தம் செய்வதற்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவை துரிதமாக அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்தயோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். (ஏ-இ)

## துயர் பகிர்கின்றோம்

**யாழ் கோப்பாய் பிரதேசத்தை பூர்வீகமாகவும், வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தியநாத சுவாமி ஆலய பரம்பரை குருவாகவும், பிரதம குருவாகவும் நீண்ட நாள் இறை சேவை செய்தவரும் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தில் நீண்ட காலமாக தலைவராக இருந்து சமய, சமூக சேவைகளை ஆற்றியவருமாகிய**

**“ ஆகம வைதீக சிரோன்மணி ”**

**சிவஸ்ரீ. பரமேஸ்வர குருக்கள் மனோகரக்குருக்கள் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு துயர் பகிர்கின்றோம்.**

**அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபகங்களை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய சிவன்தாழ் பிரார்த்திக்கின்றோம்.**

தலைவர், செயலாளர், பொருளாளர்,
நிர்வாக சபை உறுப்பினர்கள்,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ்ப்பாணம்.

## சாவகச்சேரி கால்நடை வளர்போர் கூட்டுறவுச் சங்கம் (வ-து) (லிப்கோ)

பதிவிலக்கம் - J/2063

### பொதுக்கூட்டம் - 2025
### அழைப்பிதழ்

- காலம் : 14.06.2025 (சனிக்கிழமை)
- நேரம் - காலை 10.00 மணி
- இடம் - சங்கத் தலைமைக் காரியாலய பிரதான மண்டபம்.
- தலைவர் - திரு. அ.க. ஸ்ரீபன் (சங்கத் தலைவர்)

(CR/45155) J-1

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதல்



கடந்த (15.05.2025) வியாழக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**அமரர்**

**நடராசா சுகஞ்ஞபாமா (பாமா)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் (12.06.2025) வியாழக்கிழமை காலை 06.00 மணிக்கு கீரிமலையில் நடைபெற்றது. (14.06.2025) சனிக்கிழமை சபிண்டீகரணக் கிரியையும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையம் காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனை தொடர்ந்து **ஸ்ரீ லக்ஷ்மி பிளாசா (இல.84, ஐயனார் கோயில் வீதி, தட்டாதெரு சந்தி)** இல் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்பிதலாய் ஏற்றுக்கொள்ளவும்....

இல.54, ஐயனார் கோவிலடி,
யாழ்ப்பாணம்

இங்ஙனம், குடும்பத்தினர்.
077 471 2023, 076 180 1445, 076 890 7587

(CS/30170) D*

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 15 ஸ்ரான்லி வீதி. ஆதன இல 302. என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கோவிந்தபிள்ளை மகள் குணவதி என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம். வண்ணார்பண்ணை கிழக்கு. கல்லூரி வீதி விசுவநாதர் கைலாசபிள்ளையும் விசுவநாதர் அம்பலவாணரும் அவர்களும் 27.10.1974ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு பாலசுப்பிரமணியம் முகதாவில் 88ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம். ஸ்ரான்லி வீதி இராமர்பிள்ளை கோவிந்தபிள்ளை மகள் குணவதிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி தற்போது இல 80 மேவூட் பார்க். ஸ்காபரோ ஒன்டாரியோ. எம்1கே2ஏச4 கனடாவில் வசிக்கும் மனுவேற்பிள்ளை ஜோசுவா நிர்மலன தனது காலஞ்சென்ற தாயாரான இராமன்பிள்ளை கோவிந்தபிள்ளை மகள் குணவதி மறுநாமம் கிளமென்ற் மனுவேற்பிள்ளை பெண் குணவதிக்கு தானே ஒரு பிள்ளை என 10.02.2025ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சிவயோகம் சந்திரதேவி முகதாவில் 317ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடனப்படுத்தல் உறுதி நிறைவேற்றியுள்ளார்

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் கிழக்கு இறை இல 302 ஸ்ரான்லி வீதி வட்டாரம் 15 அத்தியடி யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கும் J/78 அத்தியடி கிராமசேவையாளர் பிரிவுக்குமுட்பட்ட **"ஆழடிதரை அல்லது கிடவிழுந்தான் பள்ளம்"** இது 1972.04.10 ஆம் திகதி நிலஅளவையாளர் N.தேவராஜன் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 427Aம் இலக்க படத்தில் துண்டு 1 இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி மூன்று தசம் இரண்டு சைபர் (நில.பர.1குளி 3.20) கடைக்கட்டிடங்கள். கிணறும் தெற்கு எல்லைச் சுவரில் வடக்கு பக்கமாக அரைவாசியும் இது மீள 2024.04.03 ஆம் திகதி நிலஅளவையாளர் S.R.சிவேந்திரகலாநிதி அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட 621ம் இலக்க படத்தில் துண்டு 1 இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று குளி இரண்டு தசம் நாலு ஆறு (நில.பர 1 குளி 2.46) ஆகும். கடைக்கட்டிடங்கள். கிணறும் தெற்கு எல்லைச்சுவரில் வடக்கு பக்கமாக அரைவாசியும் இதற்கு எல்லை

கிழக்கு - குறித்த 427A இலக்க படத்தில் துண்டு 2 தற்பொழுது கனகலிங்கம் பெண் மாங்கயற்கரசியின் ஆதனமான இல 314. ஸ்ரான்லி வீதி
வடக்கு - ஸ்ரான்லி வீதி
மேற்கு - பருத்தித்துறை வீதி
தெற்கு - குறித்த 427A இலக்க படத்தில் துண்டு 3 தற்பொழுது சாந்தலிங்கம் சாரங்கனின் ஆதனமான இல 118.பருத்தித்துறை வீதி இதனடங்கலும்


தற்போது இவ்வாதனத்தை மனுவேற்பிள்ளை ஜோசுவா நிர்மலன் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது மனுவேற்பிள்ளை ஜோசுவா நிர்மலன் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்யநடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(CR 45154) E-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
24 . 08 . 1947



மறைவு
12 . 06 . 2025

**திரு விசுவநாதன் பத்மநாதன்**

எமது குடும்பத் தலைவரும் கோட்டைக்காட்டை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.விசுவநாதன் பத்மநாதன் அவர்கள் நேற்று (12.06.2025) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவநாதன்-தங்கரத்தினம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வநாயகி அவர்களின் அன்புக் கணவரும் கஜமுகனின் (Dubai) பாசமிகு தந்தையும் கௌசிகாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற நற்குணநாதன் மற்றும் நாகேஸ்வரி, ஜெகதீஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்துத்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

“பத்ம வாசா”
வட்டு தென் மேற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாஷையூர் அந்தோனியார் தேர்ப்பவனி இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 13
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் தேர்ப்பவனி இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது.
காலை 5 மணிக்கு முதலாம் திருப்பலிப் பூசையும் தொடர்ந்து யாழ். ஆயர் தலைமையில் இரண்டாம் திருப்பலி பூசையும் நடைபெற்று பி.ப 4.30 மணிக்கு புனிதரின் தேர்ப்பவனியும் இடம்பெறும். (ச-33-17)

## யாழ்...

தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியப் பேரவை, இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆகிய மூன்று தரப்புகளும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்குப் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றன. தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாநகரமேயர் வேட்பாளராகக் கபிலனும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மேயர் வேட்பாளராக மதிவதனியும், தமிழ்த் தேசியப் பேரவையின் மேயர் வேட்பாளராக கனகையா சிறிகிருஷ்ண குமாரும் நிறுத்தப்படவுள்ளனர்.
இந்த மூன்று தரப்பில் எந்தக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் என்று உறுதிபடத் தெரியாத காரணத்தால், யாழ்ப்பாணம் மாநகரசபையின் இன்றைய அமர்வு தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆட்சியைக் கைப்பற்றும் முனைப்பில் அனைத்துத் தரப்புகளும் பரஸ்பரம் ஆதரவைக் கோரி நேற்று இரவிரவாகப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தன என்று நம்பகரமாக அறிய முடிகின்றது. (அ-ம-26)

## இராணுவ...

விடுவிக்கப்பட்ட முகாமுக்கு அருகில் மனிதச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. கற்கோவளம் இராணுவமுகாமுக்குக் கிழக்குப் பக்கமாக உள்ள புல்வெளியிலேயே இந்த என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு, அந்த என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அந்த மனிதச் சிதிலங்கள் குறித்த பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் காணாமற் போனவருடையதாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (அ-ம-26-100)

## நல்லூர்...

நல்லூர் பிரதேசசபையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத காரணத்தால், தமிழரசுக் கட்சியும், தமிழ் மக்கள் கூட்டணியும் இணைந்து ஆட்சியமைப்பதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. முதலிரு ஆண்டுகளில் தமிழ் மக்கள் கூட்டணியும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் தமிழரசுக் கட்சியும் ஆட்சியமைக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.
இதன் அடிப்படையிலேயே, நல்லூர் பிரதேசசபையில் தமிழ் மக்கள் கூட்டணி இன்று ஆட்சியமைக்கும் என்று உறுதியாகத் தெரியவருகின்றது. நல்லூர் பிரதேசசபையின் கடந்த ஆட்சிக்காலத்தில் தவிசாளராகச் செயற்பட்ட ப.மயூரன் இம்முறையும் தமிழ் மக்கள் கூட்டணியால் தவிசாளர் பதவிக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வவுனியா...

களில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
அநுராதபுரம் சிறைச்சாலைக் கைதியொருவர் அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தி விடுவிக்கப்பட்டிருந்தார். இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இதுவரை 60க்கும் மேற்பட்ட கைதிகள் இவ்வாறு சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையிலேயே, நேற்று வவுனியா சிறைச்சாலைக்குள் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (அ-ம-18)

## மாணவர்களுக்கு...

பொருள் மற்றும் போதைமாத்திரைகளை விற்பனைசெய்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவல்களுக்கு அமைய மேற்கொண்ட நடவடிக்கையின்போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் நுணாவில் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்களிடம் இருந்து 200க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-28)

## திஸ்ஸ...

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தையிட்டி திஸ்ஸ விகாரையை உடைத்து அழித்துவிட்டு, அந்தக் காணியை விடுவிக்கவேண்டும் என்று சிலர் கோருகின்றனர். இன்னும் சில பௌத்த பேரினவாத சக்திகள் நூற்றுக்கணக்கானவர்களை இங்கு அழைத்துவந்து பிரச்சினையாக்கப் பார்க்கின்றனர். இவ்வாறான விடயங்களுக்கு நாம் ஒருபோதும் அனுமதி வழங்கப்போவதில்லை.
தையிட்டி திஸ்ஸ விகாரை ஒருபோதும் அழிக்கப்படாது. அந்த விகாரை அமைந்துள்ளகாணியின் உரிமையாளர்களுக்கு, அதற்குப் பதிலாக புதிய காணிகள் வழங்கப்படும். அல்லது இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இந்த மாதம் முடிவதற்குள் இந்த விடயம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கையை நாங்கள் முன்னெடுப்போம். அத்துடன், விகாரை அமைந்துள்ள ஏனைய காணிகள் விரைவில் விடுவிக்கப்படும். மாவட்டச்செயலர் ஊடாகப் பிரதேச செயலாளரிடம் அந்தக் காணிகள் பாரப்படுத்தப்படும் - என்றார். (அ-ம-125)

## பிளாஸ்ரிக்...

யாழ்ப்பாணத்தில் உள்ள கடற்பரப்புகளில் அண்மைக்காலமாக பிளாஸ்ரிக் தயாரிக்கப் பயன்படும் மூலக்கூறு என்று சந்தேகிக்கப்படும் துகள்கள் கரையொதுங்கும் நிலையில், அதுதொடர்பில் விரிவான ஆய்வு நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.
இந்த பிளாஸ்ரிக் துகள்கள் தொடர்பில், யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் பல்வேறு ஐயப்பாடுகளைத் தெரிவித்திருந்தனர். இந்த விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்கும் கொண்டுசெல்லப்பட்டிருந்தது. இதையடுத்தே, இந்த விடயம் தொடர்பில் உடனடியாக விரிவான ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறு தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவர் நிலையத்துக்கு கடற்றொழில் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ம-26)

## இந்தியாவில்...

242 பயணிகள், மற்றும் பணியாளர்களுடன், அஹமதாபாத் விமானநிலையத்தில் இருந்து நேற்று நண்பகல் புறப்பட்ட விமானமே இவ்வாறு வீழ்ந்து நொறுங்கியுள்ளது. விபத்தையடுத்து, விமானத்தில் இருந்த ஒரேயொரு பயணியைத்தவிர, ஏனைய அனைத்துப் பயணிகளும், பணியாளர்களும் உயிரிழந்துவிட்டனர் என்று அஹமதாபாத் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.
விமானத்தில் பயணித்த 242 பேரில் 169 பேர் இந்தியர்கள் என்றும், 53 பேர் பிரிட்டனையும், 7 பேர் போர்த்துக்கலையும், ஒருவர் கனடாவையும் சேர்ந்தவர்கள் என்று ஏர் இந்தியா நிறுவனம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
மருத்துவக் கல்லூரி ஒன்றின் மீதே விமானம் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனால், அந்தக் கல்லூரியைச் சேர்ந்த 5 மருத்துவ மாணவர்கள் உயிரிழந்ததுடன், 60 மாணவர்கள் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடம் என்று கூறப்பட்டுள்ளது. விமான விபத்துக்கான காரணங்களை ஆராயும் பொருட்டு, அதன் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டு ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
விபத்துக்கு இந்தியப் பிரதமர் மோடி தனது இரங்கலைத் தெரிவித்துள்ளதுடன், விரைவான மீட்பு நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டுள்ளார். அத்துடன், பிரிட்டனின் பிரதமர் ஸ்டார்மரும் தனது இரங்கலைத் தெரிவித்துதுடன், இந்த விடயத்தில் இந்தியாவுடன்துணையிருப்பதாகக் கூறியுள்ளார். (அ-ம-இ)

## பொறுப்புக்...

மனித உரிமைகள் கண்காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மூன்று நாள்கள் பயணமாக ஜேர்மனிக்குச் சென்றுள்ளார். அங்கு அவர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்திவருகின்றார். இவ்வாறான பின்னணியிலேயே, போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலைப் பொறுப்பேற்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜேர்மனிக்கான இயக்குநர் பிலிப்ரிஷ் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கம், இலங்கையின் முன்னைய அரசாங்கங்களில் இருந்து வேறுபட்டதாகத் தெரியவில்லை. முன்னைய அரசாங்கங்கள் போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட முன்னாள் அதிகாரிகளைப் பாதுகாத்தன. தற்போதைய அரசாங்கமும் அதையே செய்துவருகின்றது.
இலங்கையர்களை ஒன்றிணைத்து, ஒரு நாடாக முன்னேறிச் செல்லும் வகையிலேயே ஜனாதிபதியாக அநுர தெரிவு செய்யப்பட்டார். ஆனால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப்பலம் உள்ள போதிலும் அநுரவின் அரசாங்கம் எந்தவொரு நீண்டகாலப் பிரச்சினைக்கும் தீர்வைக் காணவில்லை.
இலங்கை அரசாங்க நிறுவனங்கள் தமிழ், முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக தொடர்ந்தும் பாகுபாடுகளைக் காட்டிவருகின்றன. பல காரணங்களை முன்வைத்து நிலங்களை அபகரிக்கின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடும்போக்கு பௌத்த மதகுருமாரும் பாதுகாப்புப் படையினரும் பல இந்து ஆலயங்களைக் கைப்பற்றி அவற்றை பௌத்த ஆலயங்களாக மாற்றியுள்ளனர் - என்றார். (அ-ம-இ)

## பேரவையின்...

நடைபெறவுள்ள நிலையில், இன்று காலை இந்த வழக்குகள் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.
உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலின்போது சாவகச்சேரி நகரசபை மற்றும் சாவகச்சேரி பிரதேசசபையில் போட்டியிட்டு உறுப்பினர்களாகத் தேர்வான இருவரும் அந்தந்தச் சபை எல்லைப் பரப்புக்குள் தம்மை ஒரு வாக்காளராகப் பதிவுசெய்வதற்குத் தகுதி அற்றவர்கள் என்ற அடிப்படையில் இருவரின் உறுப்புரிமைகளையும் இரத்துச்செய்யத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடக்கோரி இந்த வழக்குகள் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
மனுவைப் பரிசீலித்து உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடியதாக இடைக்காலத் தடை விதிக்கும் படியும் மனுவில் கோரப்பட்டுள்ளது. இந்த இரு மனுக்களும் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டதுடன், இரு தரப்பு சமர்ப்பணங்களும் முன்வைக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து மேலதிக நடவடிக்கைக்காக வழக்கு இன்று திகதியிடப்பட்டுள்ளது.
வழக்குத்தொடுநர் சார்பில் இன்று சிரேஷ்ட சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ முன்னிலையாகி வழக்கின் விவரத்தை எடுத்துரைக்கவுள்ளார். தமிழ்த் தேசியப் பேரவையின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் வழக்கில் முன்னிலையாகவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## வீடா?...

யில் இன்று மாலை இடம்பெறவுள்ளது. இதில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தமிழரசுக் கட்சிக்கும், தமிழ் மக்கள் பேரவைக்கும் இடையில் பலப்பரீட்சை நடைபெறவுள்ளது. இரு தரப்பினரும், தமக்கு ஆதரவைக் கோரி நேற்று இரவிரவாக பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தனர். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் விபத்து; மூவருக்குப் படுகாயம்

வவுனியா, ஜூன் 13

வவுனியா - மன்னார் வீதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா - மன்னார் வீதியில் காமினி மகாவித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று மாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது ஒரு பெண் உட்பட மூவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)


## தோட்டப் பராமரிப்பாளர் தேவை



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வீடொன்றின் வீட்டுத் தோட்டத்தைப் பராமரிப்பதற்குப் பணியாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு :- 077 120 9998

## வேலையாட்கள் தேவை

பிரபல உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை

- பார்சல் கட்டுவர் - நாள் ஒன்றிற்கு 2500/= (ஆண்)
- துப்பரவு பணியாளர் - நாள் ஒன்றிற்கு 2000/= (ஆண்)
- உணவு விநியோகிப்பவர் - நாள் ஒன்றிற்கு 2000/= (ஆண்)
- சிட்டை எழுதுனர் - இருபாலரும் - நாள் ஒன்றிற்கு 2200/=

தொடர்பு: 077 907 9888

## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு கீழ் வரும் பணி நிலைகளுக்குரிய பணியாளர் தேவை.

தகுதியுடையோர் தொடர்பு கொள்ளவும்

- கொத்து ரொட்டி தயாரிப்பவர்
- பிறைட் றைஸ் தயாரிப்பவர்
- ரொட்டி வேலை செய்பவர்
- சமையலாளர்
- சமையல் உதவியாளர்

தொடர்புகளுக்கு: 077 649 1027


# பேராதனையில் புனர்வாழ்வு நிலையம்

பேராதனையில் 21 வயதிற்குட்பட்ட போதைவஸ்துக்கு அடிமையானவர்களை பராமரிக்கும் புனர்வாழ்வு நிலையமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. 110 மில்லியன் செலவில் அமைக்கப்படவுள்ள இந்தப் புனர்வாழ்வு நிலையத்தில் போதைவஸ்துக்கு அடிமையான சிறுவர்களைத் தங்கவைத்து பராமரிக்கும் செயற்பாடுகளுடன் போதைவஸ்துப் பாவனையின் தாக்கத்தைப்பொறுத்து நிலையத்திற்கு வெளியே வைத்தும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. (ச-41-6)

# மஹோற்சவம்

சாவகச்சேரி, சங்கத்தானை வைரவசுவாமி கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

12 தினங்கள் நடைபெறவுள்ளதுடன் மஹோற்சவ காலத்தில் விசேட உற்சவம் தவிர்ந்த நாள்களில் தினமும் காலை 8.30 மணிக்கு பகல்திருவிழாவும், மாலை 5.30 மணிக்கு இரவுத் திருவிழாவும் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (ச-41)



# ஜேர்மன் வெளியுறவு அமைச்சரை சந்தித்தார் ஜனாதிபதி அநுரகுமார

கொழும்பு, ஜூன் 13

ஜேர்மனுக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜெர்மன் வெளியுறவு அமைச்சர் ஜொஹான் வடபுலை நேற்றுமுன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

அரசாங்க முன்னுரிமைகளின் அடிப்படையில் வர்த்தகம், டிஜிட்டல் பொருளாதாரம், முதலீடு மற்றும் தொழில் பயிற்சி வாய்ப்புகள் உட்பட இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான புதிய வழிகள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொதுக்கூட்டம்


யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ்ப்பாண மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தின் 16ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட ப.சே.ஓ.ந. நிதியத்தின் தலைவர் அப்புத்துரை அருந்தவநேசன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலக பதில் அரச அதிபர் உயர்திரு மருதலிங்கம் பிரதீபன், சிறப்பு விருந்தினராக கொழும்பு ப.சே.ஓ.ந. நிதியம், தாய்ச்சங்க பொருளாளர் உயர்திரு சோமசுந்தரம் சுப்பிரமணியம், யாழ்.மாவட்டச் செயலக கணக்காளர் உயர்திரு செல்லத்துரை கிருபாகரன், யாழ்.மாவட்டச் செயலக நிர்வாக அலுவலர் உயர்திரு ஆறுமுகம் சக்தியமூர்த்தி, கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக ஓய்வூதிய அலுவலர் ஜெ.பிரதீபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-41)


## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 10 . 1955



மறைவு 11 . 06 . 2025

**ஜெயசிங்கம் பிரேம்நாத் ஜெயகுமார்**
(Secretary, Royal Pearl Garden Welfare Society)

நல்லூர், நாயன்மார் வீதியைப் பிறப்பிடமாகவும் 198, 10ம் ஒழுங்கை, ரோயல் பேள் கார்டன், அல்விஸ் டவுன், வத்தளையை வதிவிடமாகவும் கொண்ட ஜெயசிங்கம் பிரேம்நாத் ஜெயகுமார் அவர்கள் நேற்று முன்தினம் (11.06.2025) புதன்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயசிங்கம் (கொழும்பு நகராட்சி விளையாட்டு மைதான மேற்பார்வையாளர்) - கமலாவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (மிருதங்க வித்துவான்) - காமாட்சி அம்மா தம்பதியினரின் மருமகனும் சந்தானலட்சுமியின் அன்புக்கணவரும் பிரேமானந் சதீஷ்குமார் (London), ஜனனி (Canada) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜனனிகா (London), நிரோசன் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும் சஷ்வினாவின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற ரவீந்திரநாத் பிரேம்குமார் மற்றும் சந்திரலேகா (London), காலஞ்சென்ற அமர்நாத் அசோக்குமார் மற்றும் சந்திரஜோதி (London) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரேமலா (ஜேர்மனி), செல்வகுமார் (லண்டன்), கீதா, குணசீலன் (லண்டன்), ரகுநாதன் (மிருதங்க வித்துவான்), காலஞ்சென்ற ஜெயராமன் (வயலின் வித்துவான்), இராமச்சந்திரன், ஸ்ரீனிவாசன் (London), காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 03.00 மணிக்கு கெரவலப்பிட்டிய இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

இல 198, 10 ஆம் ஒழுங்கை
றோயல் பேள் கார்டன்
அல்விஸ்டவுன்
வத்தளை

தகவல் :
குடும்பத்தினர்
077 159 1019
077 900 9366

(CS 58552) E-1

## அந்தியேட்டி சபிண்டிகரண அழைப்பு

தோற்றம் 02 . 04 . 1958



மறைவு 16 . 05 . 2025

கடந்த 16.05.2025 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வம்

**அமரர் சோமசுந்தரம் சிவபாலன்**

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் நாளைமறுதினம் (15.06.2025) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 05.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் ஆலயத்திற்கு அருகிலுள்ள மடத்திலும் சபிண்டிகரண கிரியைகள் காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அல்வாய் தெற்கு,
அல்வாய்

குடும்பத்தினர்.
077 211 1148

(CS 29644) E-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org